**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-1** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 05th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் தளவாப்பாளையம் கோழிப்பண்ணையில் வசித்து வந்து, கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். நான் பட்டியலில் உள்ள இந்து, பள்ளர் சாதியை சேர்ந்தவன். எனக்கு ஒரு மகள், இரண்டு மகன்கள். இவ்வழக்கில் இறந்துபோன

ரஞ்சித்குமார் என் இளைய மகன். கடந்த 17.12.2020 அன்று மாலை சுமார் 4.30 – 5.00 மணியளவில் என் மகன் இறந்துவிட்டார் என வான்மதி என்பவர் எனக்கு போன்மூலமாக தகவல் கொடுத்தார். அவர் என் மகனின் நண்பர். உடனிருந்தவர். வான்மதி எனக்கு போன் செய்தவுடன், நான் புகளூர், நால்ரோடு, மூலிமங்கலம், காபி ஷாப் ஹோட்டல் அருகே சென்றேன். அங்கு வான்மதி அங்கிருந்தார். பின்னர் நான் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பின்னர் கரூரில் வசித்து வந்த என் மகளுக்கு போன் செய்து, என் மகளை வரச்சொல்லிவிட்டு, நான் அரசு மருத்துவமனை சென்று, என் மகனின் பிரேதத்தை பார்த்தேன். பின்னர், அங்கிருந்து வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திற்கு இரவு 10.00 மணிக்கு சென்றேன். நான் சொல்ல சொல்ல என் மகள் சுகுணா புகாரை எழுதினார். அந்த புகாரில் நான் கையெழுத்திட்டேன். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவதாகும். அந்த புகார் அ.சா.ஆ.1. அ.சா.ஆ.1 புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது.

கலையரசன் என்பவருக்கும், என் மகனுக்கும் ஏற்கனவே தகராறு ஏற்பட்டது. வேலை செய்ததில் பணம் பிரித்துக்கொள்வது சம்மந்தமாக அவர்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது. ஆஜரில் உள்ள கலையரசன், விக்கி, கோகுல், பிரசாந்த், பிரசாத் ஆகியோர் என்னுடைய மகனின் நண்பர்கள்.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**<u>3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும், கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-2** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சுகுணா | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 05th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் கரூர், ஆத்தூர் பிரிவில் குடியிருந்து, B.A., B.L., படித்து, திருச்சியிலும், கரூரிலும் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 என் அப்பா. இவ்வழக்கில் இறந்துபோன ரஞ்சித்குமார் என் தம்பி. கடந்த ......

17.12.2020 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் என் அப்பா எனக்கு போன் செய்து, என் தம்பியை வேலாயுதம்பாளையம் காபி பார் அருகே வெட்டிவிட்டதாக சொன்னார். பின்னர், எனக்கு போன் செய்து, என் தம்பியை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டதாக கூறினார். நான் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அரசு மருத்துவமனைக்கு என் அப்பாவும் வந்திருந்தார். நானும், என் அப்பாவும் மருத்துவமனையில் இருந்த என் தம்பி பிரேதத்தை பார்த்து, அது என் தம்பி என உறுதி செய்தோம். பின்னர், அங்கிருந்த வான்மதி என்பவரிடம் என் தம்பிக்கு என்ன நடந்தது என்று கேட்டு, விசாரித்தோம். அவர் கூறினார். பின்னர், நானும், என் அப்பாவும் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு வைத்து என் அப்பா சொல்ல சொல்ல நான் புகாரை எழுதி, என் அப்பாவிடம் படித்து காண்பித்தேன். பின்னர் அந்த புகாரில் என் அப்பா கையெழுத்து போட்டு, காவல்நிலையத்தில் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் நான் எழுதிய புகார் ஆகும். புகார் கொடுக்கும்போது இரவு 10.00 மணி இருக்கும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**<u>3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும், கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-3** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமர் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 05th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் பரமத்தி வேலூர், பாண்டமங்கலத்தில் வசித்து வந்து, கூலி வேலை செய்கிறேன். 2020 ம் வருடம் டிசம்பர் மாதத்தில் இவ்வழக்கு சம்பவ சமயத்தில் 91 காபி ஷாப் என்ற கடையில் டீ மாஸ்டராக வேலை பார்த்து வந்தேன். அந்த

கடை கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம், மூலிமங்கலம் பிரிவில் உள்ளது. அந்த கடை உரிமையாளர் பெயர் திருமாறன். 2020ம் வருடம் டிசம்பர் மாதத்தில் ஒருநாள் மாலை சுமார் 4.00 மணிக்கு மேல் நான் எனது கடையில் வாடிக்கையாளருக்கு டீ போடும் வேலை செய்துக்கொண்டிருந்தேன். அப்போது டீக்கடையில் என்னுடன் ஜெயந்தி என்பவர் இருந்தார். அப்போது நான் டீ போட்டுக்கொண்டிருந்தேன். வேறு எதையும் நான் பார்க்கவில்லை. எனக்கு வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கு சம்பவம் நான் டீ போட்டுக்கொண்டிருந்த கடையிலிருந்து 10 அடி தூரத்திலிருந்த அட்சயா ஹோட்டல் முன்பு நடந்தது. நான் டீ போட்டுக்கொண்டிருந்த இடத்திலிருந்து பார்க்கும் தூரத்தில் சம்பவம் நடந்தது. சம்பவ சமயத்தில் நான் அங்குதான் இருந்தேன். நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும், எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

போலீசார் என்னை விசாரித்தபோது, நான் வழக்கு சம்பவத்தை கண்ணுற்றேன் என்று கூறியுள்ளேன் என்றும், எதிரிகள் எப்படி இருந்தனர் என்ற அடையாளத்தை கூறினேன் என்றும், எதிரிகள் எத்தனை வண்டியில் எத்தனை பேர் வந்தனர் என்று சொல்லியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வேலை பார்த்த கடையில் கண்காணிப்பு கேமரா உள்ளது. மறுநாள் போலீசார் என் கடைக்கு வந்து கண்காணிப்பு கேமரா பதிவுகளை கைப்பற்றியபோது நான் கடையில் இருந்தேன் என்றால் சம்பவத்திற்கு பிறகு இரண்டு நாட்கள் நான் விடுப்பிலிருந்தேன். கண்காணிப்பு கேமரா பதிவில் நான் சம்பவத்தை நேரில் பார்த்து சத்தம்போடுவது பதிவாகியுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-4** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவக்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 05th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூரில் வசித்து வந்து, வேலாயுதம்பாளையம் மூலிமங்கலம் பிரிவுக்கு எதிரே அட்சயா ஹோட்டல் என்ற பெயரில் ஹோட்டல் நடத்தி வருகிறேன். என் கடையை ஒட்டி 91 பேக்கரி

உள்ளது. என்னுடைய கடையில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது. அந்த கண்காணிப்பு கேமராவின் DVR பக்கத்தில் உள்ள 91 பேக்கரியில் உள்ளது. இவ்வழக்கு சம்பவம் நடந்த 2020 வருடம் டிசம்பர் மாதத்தில் வழக்கு சம்பவம் நடந்தபோது நான் என் வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது கடையில் கணேசன் என்ற மாஸ்டர் இருந்தார். நான் வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

91 காபி கடையிலும் தனியாக கண்காணிப்பு கேமரா உள்ளது. இவ்வழக்கு சம்பவத்தின்போது நான் வீட்டில் இருந்தேன் என சொல்வது பொய் என்றும், சம்பவம் நடந்தபோது நான் என் கடையில்தான் இருந்தேன் என்றும், அந்த விவரம் கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தபோது, இவ்வழக்கில் இறந்துபோன ரஞ்சித்குமார் என்பவரை மூன்று இரண்டு சக்கர வாகனங்களில் எட்டுபேர் வந்தனர் என்றும், அவர்களில் ஒருவர் ரஞ்சித்குமாரின் பின்னந்தலையில் வாளால் வெட்டினார் என்றும், வெட்டுப்பட்ட ரஞ்சித்குமார் என் கடைக்கு முன்பாக ஓடிவந்தார் என்றும், அப்போது, மற்றொரு நபர் ரஞ்சித்குமாரை துரத்தி வந்து, ரஞ்சித்குமாரின் காலை தட்டி, கீழே விழவைத்தார் என்றும், பின்னால் வந்த இரண்டுபேர் வீச்சருவாள், வாள் கத்தி ஆகியவற்றால் ரஞ்சித்குமாரின் தலையிலும், உடலிலும் மாறி மாறி வெட்டினார்கள் என்றும், அவர்களுடன் வந்த மற்ற நபர்களும் கத்தியை வாங்கி, அவர்களும் வெட்டினார்கள் என்றும், அதன்பிறகு, அவர்கள் அனைவரும் தாங்கள் வந்த இருசக்கர வாகனத்தை எடுத்தக்கொண்டு, பைபாஸ் வழியாக ஓடிவிட்டனர் என்றும், வெட்டுப்பட்ட ரஞ்சித்குமார் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், இறந்துபோனவரின் பல்சர் இருசக்கர வாகனம், செருப்பு, எதிரிகள் அணிந்து வந்த ஒருஜோடி செருப்பு ஆகியவை சம்பவ இடத்தில் கிடந்தன என நான் போலீசாரிடம் வாக்குமூலம்

அளித்துள்ளேன் என்றும், அங்கிருந்தவர்களிடம் வான்மதி என்பவருக்கு தகவல் கொடுக்குமாறு நான் சொன்னேன் என்றும், பின்னர் வான்மதியும், இறந்துபோனவரின் அப்பா வந்தபோதும் அவர்களிடமும் நான் கூறினேன் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றும், அதன்பின்னர் 18.12.2020 அன்று போலீசார் என் கடையில் உள்ள கண்காணிப்பு கேமராவில் உள்ள பதிவுகளை பதிவிறக்கம் செய்வதற்கு, என்னிடம் ஆவண அத்தாட்சி கடிதம் கொடுத்தனர் என்றும், அதற்கு நான் அனுமதி கொடுத்ததின் பேரில், கண்காணிப்பு கேமராவின் பதிவுகளை பென்டிரைவ் மற்றும் குறுந்தகடுகளில் பதிவிறக்கம் செய்தனர் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து, உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நீதிமன்ற கேள்வி :- உங்கள் கடைக்கு உரிமம் உள்ளதா?
பதில் - உரிமம் உள்ளது.

நீதிமன்ற கேள்வி :- உங்கள் கடையில் அரசு விதிமுறையின்படி கண்காணிப்பு கேமரா வைத்துள்ளீரா?
பதில் - வைத்துள்ளேன்.

கேள்வி - கண்காணிப்பு கேமராவிற்கு DVR வைத்துள்ளீர்களா?
பதில் - வைக்கவில்லை.

கேள்வி - ஏன் வைக்கவில்லை?
பதில் - வைக்கவில்லை என சாட்சி கூறுகிறார்.

**1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்குக்கோப்புகளை படித்து, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் தேவை எனவும், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதற்கு ஒத்தி வைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்படாமல், தள்ளுபடி செய்யப்பட்டது. குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-5** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : வான்மதி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 05th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் வேலாயுதம்பாளையத்தில் வசித்து வந்து, காய்கறிக்கடை வைத்துள்ளேன். இவ்வழக்கில் இறந்துபோன ரஞ்சித்குமாரை எனக்கு தெரியும். அவர் என் கடைக்கு பக்கத்து கடையில் எலக்ட்ரீசியனாக வேலை பார்த்தார்.

சம்பவத்திற்கு முன்பு 15 நாட்கள் ரஞ்சித்குமார் என் வீட்டில் இருந்தார். ரஞ்சித்குமாருக்கும், அவர் மனைவிக்கும் பிரச்சினை ஏற்பட்டு சப்ஜெயிலில் அவர் இருந்து, வெளியில் வந்தார். மீண்டும் வீட்டுக்கு வந்தால் பிரச்சினையாகிவிடும் என்று ரஞ்சித்குமாரின் பெற்றோர்கள் சொன்னார்கள். சம்பவத்திற்கு முதல்நாள் வீட்டிற்கு செல்கிறேன் என்று சொல்லி சென்றுவிட்டு திரும்பி வந்தார். 17ம் தேதி காலையில் வீட்டிலிருந்தவர் வெளியில் எங்கும் செல்லவில்லை. பிற்பகல் 3.30 – 4.00 மணியளவில் பைபாஸில் இருசக்கர வாகனம் நிற்கிறது என சொல்லி, ஆதார் அட்டையை வாங்கிக்கொண்டு, சலூன்கடைக்காரர் அரசன் என்பவருடன் சென்றார். அதன்பிறகு, 5.30 மணியளவில் காவல்நிலையத்திலிருந்து ரஞ்சித்குமாரை தெரியுமா என கேட்டனர். ரஞ்சித்குமாரின் பெற்றோர் போன் நெம்பரையும் கேட்டனர். பின்னர், வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திலிருந்து என்னை அழைத்தனர். நான் சென்றபிறகுதான் ரஞ்சித்குமார் இறந்த விவரம் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

ரஞ்சித்குமார் என் வீட்டில் தங்கியிருந்தபோது, அவருக்கும், அவர் நண்பர்களுக்கும் தகராறு ஏற்பட்டது பற்றி என்னிடம் கூறவில்லை. ரஞ்சித்குமாரும், அவருக்கு நண்பர்களாக இருந்த எதிரிகள் கலையரசன், பிரசாந்த், பிரசாத், கோகுல்நாத், ஷேக்தாவுத் ஆகியோர்களை எனக்கு தெரியும் என்றும், அவர்கள் ரஞ்சித்குமாருடன் ஒன்றாக வேலை பார்த்து வந்தனர் என்றும், அதனால் எதிரிகளை எனக்கு தெரியும் என்றும், கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக ரஞ்சித்குமாருக்கும், கலையரசனுக்கும் இடையே தகராறு ஏற்பட்டு,

அடித்துக்கொண்டனர் என்றும், அதை ரஞ்சித்குமார் என்னிடம் கூறினார் என்றும், ரஞ்சித்குமார் திருச்சிக்கு சென்று, சிறையிலிருந்த அவர் நண்பர் ஜெகன் என்பவரை பார்த்துவிட்டு திரும்பி வந்தார், அப்போது சிறையிலிருந்த ஜெகனுக்கும், சிறையிலிருந்த கூல்மணிகண்டன் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டது என்றும், பின்னர், கூல்மணிகண்டனையும் மனு போட்டு ரஞ்சித்குமார் சிறைச்சாலையில் பார்த்து, திருச்சியை தாண்ட மாட்டாய் என மிரட்டி வந்ததாக என்னிடம் கூறினார் என்றும், மணிகண்டன் சிறையிலிருந்து வெளியில் வந்ததால் எனக்கு ஆபத்து உள்ளது என்று என்னிடம் ரஞ்சித்குமார் கூறினார்ள ன்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரஞ்சித்குமாரை வெட்டி விட்டார்கள் என ரஞ்சித்குமாரின் அப்பாவிற்கு நான்தான் போன் மூலம் தகவல் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை** இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-6** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : அரசக்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 05th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் வேலாயுதம்பாளையம் பைபாஸ் ரோட்டில் சலூன் கடை வைத்து நடத்தி வருகிறேன். என் கடையில் பிரகாஷ் என்பவர் வேலை பார்த்து வந்தார். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன ரஞ்சித்குமாரை எனக்கு தெரியும்.

சம்பவத்தன்று ரஞ்சித்குமாரை வான்மதி என்பவரின் கடையிலிருந்து பிற்பகல் 3.00 மணிக்கு மேல் அழைத்துச்சென்றேன். ரஞ்சித்குமாரின் வண்டிசாவியும், இருசக்கர வாகனம் ஸ்டேண்டில் நிறுத்தியிருந்த டோக்கன் ஆகியவற்றை என் கடையில் வேலை பார்த்த பிரகாஷ் வைத்திருந்தார். இருசக்கர வாகனத்தின் சாவியையும், டோக்கனையும் எடுத்துக்கொடுப்பதற்காக ரஞ்சித்குமாரை என் கடைக்கு அழைத்துச்சென்றேன். நானும், ரஞ்சித்குமாரும் என் கடைக்கு சென்றபோது என் கடை பூட்டப்பட்டிருந்தது. கடை சாவியை பிரகாஷ் வைத்திருந்தார். பிரகாஷ் என்பவர் ஹைஸ்கூல் மேட்டில் உள்ள முருகானந்தம் என்பவர் வீட்டில் இருந்தார். பிரகாஷிடம் போன் செய்து கேட்டுவிட்டு, நானும், ரஞ்சித்குமாரும் முருகானந்தம் வீட்டிற்கு சென்று, அங்கிருந்த பிரகாஷிடம் கடை சாவியை வாங்கி வந்து, ரஞ்சித்குமாரின் இருசக்கர வாகனத்தின் சாவியையும், டோக்கனையும் எடுத்துக்கொடுத்தேன். அதன்பிறகு, மது அருந்துவதற்காக நானும், முருகானந்தமும் என் இருசக்கர வாகனத்திலும், ரஞ்சித்குமாரும், பிரகாசும் ரஞ்சித்குமாரின் இருசக்கர வாகனத்திலும், என் கடையிலிருந்து மூலிமங்கலம் பிரிவு பைபாசிலுள்ள மதுபானக்கடைக்கு மது அருந்த சென்றோம். ரஞ்சித்குமார் என்னிடம் பெட்ரோல் பங்க் அருகே நிற்குமாறும், கடையில் சரக்கு வாங்கி வருகிறோம் என்று கூறிவிட்டு, ரஞ்சித்குமாரும், பிரகாஷும் சென்றனர். பின்னர், பிரகாஷ் மட்டும் வந்து, ரஞ்சித்குமாரை வெட்டிவிட்டார்கள் என சொன்னார். நான் பிரகாஷையும், முருகானந்தத்தையும் பைபாஸில் இறக்கிவிட்டுவிட்டு, என் வீட்டிற்கு சென்றேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

நீதிமன்ற கேள்வி :- உங்களுடன் வந்த ரஞ்சித்குமாருக்கு என்ன ஆனது என்று பார்த்தீர்களா?

பதில் - பார்க்கவில்லை.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்குக்கோப்புகளை படித்து, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் தேவை எனவும், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதற்கு ஒத்தி வைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்படாமல், தள்ளுபடி செய்யப்பட்டது. குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,<br>
முதன்மை மாவட்ட நீதிபதி,<br>
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-7** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமாவளவன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 05th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூரில் வசித்து வந்து, 91 கபே என்ற பெயரில் வேலாயுதம்பாளையம் பைபாஸில் பேக்கரி வைத்துள்ளேன். என் கடையில் ஜெயந்தி, ராமன் ஆகியோர் வேலை பார்த்து வந்தனர். என் ......

கடையில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்பவம் நடந்த 17.12.2020 அன்று நான் கோயம்புத்தூரில் இருந்தேன். அன்றைய தினம் என் கடையில் நான் இல்லை. அன்றைய தினம் என் கடையில் ராமர், ஜெயந்தி ஆகியோர் இருந்தனர். ராமர் என்பவர் டீ மாஸ்டராகவும், ஜெயந்தி என்பவர் கடையில் கல்லாவில் இருந்து மேற்பார்வை செய்து நிர்வகித்து வந்தார். இவ்வழக்கு சம்பவத்திற்கு மறுநாள் போலீசார் என் கடைக்கு வந்து, கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ள பதிவுகளை பதிவிறக்கம் செய்வதற்கு அனுமதி கேட்டனர். கண்காணிப்பு கேமராவில் உள்ள பாஸ்வேர்டுகளை ஓப்பன் செய்து கொடுத்தவுடன், போலீசார் கண்காணிப்பு கேமராவின் பதிவுகளை DVR-லிருந்து பதிவிறக்கம் செய்தனர். என் கடைக்கு அருகில் உள்ள அட்சயா ஹோட்டல் கண்காணிப்பு கேமராவின் பதிவுகளும் என் கடையில் உள்ள DVR-ல் தான் பதிவாகிறது. அட்சயா ஹோட்டலில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளையும் போலீசார் பதிவிறக்கம் செய்தனர். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தன்று நான் கடையில் இல்லை.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்தன்று, சம்பவ சமயத்தில் நான் என் கடையில் இருந்தேன் என்றும், அப்போது ஒரு இருசக்கர வாகனத்தில் இரண்டு பேர் வந்தனர் என்றும், அவர்களை பின்தொடர்ந்து, மூன்று இரண்டு சக்கர வாகனங்களில் எட்டுபேர் வந்தார்கள் என்றும், அவர்கள் வாள், கத்தி, வீச்சருவாளுடன் இருசக்கர வாகனத்திலிருந்து இறங்கினார்கள் என்றும், அப்போது இறந்துபோன ரஞ்சித்குமார் என்பவருடன் பேசிக்கொண்டிருக்கும்போதே அவர் பின்னாலிருந்து வாளால் அவரது பின்னந்தலையில் வெட்டினார்கள் என்றும், வெட்டுப்பட்ட ரஞ்சித்குமார் என் கடைக்கு முன்னால் ஓடி வந்தார் என்றும், ......

எட்டுபேர்களில் ஒருவர் பின்னால் ஓடிவந்து, ரஞ்சித்குமாரின் காலை தட்டி, கீழே விழ வைத்தார் என்றும், கீழே விழுந்த ரஞ்சித்குமாரை இரண்டுபேர் வீச்சருவாள், வாள்கத்தியால் முகத்திலும், தலையிலும், உடம்பிலும் மாறி மாறி வெட்டினார்கள் என்றும், உடனிருந்த இரண்டு நபர்கள் வீச்சருவாளையும், வாளையும் வாங்கி, ரஞ்சித்குமாரை மாறி மாறி வெட்டினார்கள் என்றும், பின்னர் அவர்களுடைய வாகனத்தை எடுத்துக்கொண்டு, பைபாஸ் வழியாக சென்றுவிட்டார்கள் என்றும், வெட்டியவர்களுக்கு 23 முதல் 25 வயது இருக்கும் என்றும், முதலில் ரஞ்சித்குமாரின் பின்னந்தலையில் வெட்டியவர் மஞ்சள்கலர் டீசர்ட், அரைக்கால் டிராயரும் போட்டிருந்தார் என்றும், வீச்சருவாளால் வெட்டியவர் மொட்டை அடித்தும், பிரவுன் கலர் முழுக்கை சட்டையும், அரைக்கால் டிராயரும் போட்டிருந்தார்கள் என்றும், அவர்களிடமிருந்து வீச்சருவாள் மற்றும் கத்தியை வாங்கிய ரஞ்சித்குமாரை வெட்டிய இரண்டு பேரும் வெள்ளைக்கலர் முழுக்கை சட்டை அணிந்திருந்தனர் என்றும், அதில் ஒருவர் கருப்பு கலர் பேண்டும், மற்றொருவர் கருப்பு கலர் வேட்டியும் அணிந்திருந்தனர் என்றும், எதிரிகளில் ஒருவருடைய செருப்பு அந்த இடத்திலேயே கிடந்தது என்றும், இறந்துபோனவரின் ஒரு ஜோடி செருப்புகளும், அவருடைய இருசக்கர வாகனமும் அங்கேயே கிடந்தது என்றும், நான் அருகில் சென்று பார்த்தபோது, முகத்திலும், தலையிலும், கையிலும் வெட்டுப்பட்டு, இரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்தார் என்றும், பின்னர், விசாரித்ததில், இருசக்கர வாகனத்திலிருந்து முதலில் இறங்கி ரஞ்சித்குமாருடன் பேசிக்கொண்டிருந்த நபர் வேலாயுதம்பாளையத்தை சேர்ந்த கலையரசன் என்றும், மற்ற நபர்கள் பிரசாந்த், பிரசாத், ஷேக்தாவுத், கோகுல்நாத், சீனு (எ) சீனிவாசன் மற்றும் மதுரையை சேர்ந்த கூல்மணி, சூர்யா என தெரிந்துக்கொண்டேன் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**<u>3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்குக்கோப்புகளை படித்து, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் தேவை எனவும், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதற்கு ஒத்தி வைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்படாமல், தள்ளுபடி செய்யப்பட்டது. குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-8** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயந்தி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 05th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் வேலாயுதம்பாளையத்தில் வசித்து வந்து, 91 காபி ஷாப்பில் சப்ளையராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.7 அந்த கடையின் உரிமையாளர். அ.சா.3 ராமர் அந்த கடையில் டீ மாஸ்டர். சம்பவம் நடந்த ......

கடந்த 17.12.2020 அன்று நான் கடைக்கு உள்ளே வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். சம்பவ சமயத்தில் கடைக்கு வெளியே என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் கடைக்கு உள்ளே வேலை செய்துக் கொண்டிருந்தேன். நான் பணிபுரிந்த கடையில் கண்காணிப்பு கேமரா உள்ளது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தபோது, கடந்த 17.12.2020 அன்று நான் என் கடையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது, என் கடைக்கு முன்பாக கடை உரிமையாளர் திருமாவளவன் நின்றுக்கொண்டிருந்தார் என்றும், டீமாஸ்டர் ராமர் கடைக்கு வெளியே டீ போட்டுக்கொண்டிருந்தார் என்றும், அப்போது கடைக்கு வெளியே அலறல் சத்தம்கேட்டு, நான் கடையிலிருந்து வெளியே ஓடிவந்தபோது, அட்சயா ஹோட்டல் முன்பு ஒருவரை கீழே படுக்க வைத்து, வாள் கத்தியாலும், வீச்சருவாளாலும் வெட்டிக்கொண்டிருந்தார்கள் என்றும், வந்தவர்கள் இரண்டுபேர் வாள்கத்தி, வீச்சருவாளை வாங்கி அவர்களும் வெட்டினார்கள் என்றும், வெட்டிவிட்டு, இருசக்கர வாகனங்களில் எட்டுநபர்களும் கரூர் பைபாஸ் ரோட்டில் கிழக்கு நோக்கி சென்றுவிட்டார்கள் என்றும், வெட்டியவர்களுக்கு வயது 20 முதல் 25 இருக்கும் என்றும், வாள்கத்தியை கொண்டு வெட்டியவர் மஞ்சள்கலர் டீசர்ட், அரைக்கால் டிராயரும் போட்டிருந்தார் என்றும், வீச்சருவாளால் வெட்டியவர் மொட்டையடித்தும், பிரவுன் கலர் முழுக்கை சட்டையும், அரைக்கால் டிராயரும் போட்டிருந்தார் என்றும், வீச்சருவாள், கத்தி ஆகியவற்றை வாங்கி வெட்டிய இரண்டு பேரும் வெள்ளைக்கலர் முழுக்கை சட்டை அணிந்திருந்தனர் என்றும், அதில் ஒருவர் கருப்பு கலர் பேண்டும், மற்றொருவர் கருப்பு கலர் வேட்டியும் அணிந்திருந்தனர் என்றும், எதிரிகளில் ஒருவருடைய செருப்பு அந்த இடத்திலேயே கிடந்தது என்றும், இறந்துபோனவரின் ஒரு ஜோடி செருப்புகளும், அவருடைய இருசக்கர .......

வாகனமும் அங்கேயே கிடந்தது என்றும், நான் அருகில் சென்று பார்த்தபோது, முகத்திலும், தலையிலும், கையிலும் வெட்டுப்பட்டு, இரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்தார் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பில் வழக்குக்கோப்புகளை படித்து, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் தேவை எனவும், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதற்கு ஒத்தி வைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்படாமல், தள்ளுபடி செய்யப்பட்டது. சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-9** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலமுருகன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 05th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் வெங்கமேட்டில் வசித்து வந்து, கரூர், சேலம் மெயின்ரோட்டில், வெங்கமேட்டில் என்.எஸ்.கே. நகருக்கு அருகில் ஏ1 பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறேன். என்னுடைய பெட்ரோல் பங்க்கில் 11 கண்காணிப்பு கேமராக்கள்

உள்ளன. கடந்த 2020ம் வருடம், டிசம்பர் மாதத்தில் வேலாயுதம்பாளையம் போலீசார் வந்து, என்னுடைய பெட்ரோல் பங்கில் உள்ள கண்காணிப்பு கேமராவில் உள்ள பதிவாகியுள்ள பதிவுகளை பார்க்க வேண்டுமென்று கேட்டனர், நான் அனுமதி கொடுத்ததின்பேரில் பதிவுகளை பார்வையிட்டனர். அந்த பதிவுகளை போலீசார் பென்டிரைவில் பதிவிறக்கம் செய்தனர். இது சம்மந்தமாக போலீசார் என்னை ஒருவாரம் கழித்து விசாரித்தனர்.

**1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னுடைய பெட்ரோல் பங்கில் என்ன பதிவிறக்கம் செய்துக்கொண்டனர் என்று எனக்கு தெரியாது என்றால் வழக்கு சம்மந்தமாக உள்ள பதிவுகளை பதிவிறக்கம் செய்துக்கொள்வதாக கூறினார்கள். நான் அப்போது அறைக்குள் உள்ளே இல்லை என்றால் அறைக்கு வெளியே நின்றுக்கொண்டிருந்தேன். போலீசார் என்ன பதிவிறக்கம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் DVR ல் இருந்த பதிவுகளை பதிவிறக்கம் செய்தனர். நான் சொன்னபடி, போலீசார் என்னுடைய பெட்ரோல் பங்கிலிருந்த DVR ல் இருந்த பதிவுகளை பதிவிறக்கம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-10** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சதீஸ்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 05th day of March 2024.

**(1** ம் எதிரி கலையரசன்**, 3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் திருச்சி புதுமாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வந்து, டிரைவராக வேலை பார்க்கிறேன். அ.சா.1 ரமேஷ் என் அப்பா. அ.சா.2 சுகுணா என் அக்கா. இவ்வழக்கில் இறந்துபோன ரஞ்சித்குமார் என் அண்ணன். ......

இவ்வழக்கு சம்பவத்திற்கு ஒருவாரத்திற்கு முன்னர் என் அண்ணன் ரஞ்சித்குமார் திருச்சிக்கு என் வீட்டிற்கு வந்து, அவருடைய உடைகளை எடுத்துக்கொண்டு கிளம்பினார். அப்போது வேலை செய்த இடத்தில், அவருடன் வேலை பார்த்த நபர்களுடன் பிரச்சினை என்று கூறினார். அந்த நபர்கள் கலையரசன் மற்றும் இரண்டு நபர்கள் என்று சொன்னார். என்ன பிரச்சினை என்று நான் கேட்டதற்கு, வேலை செய்யும்போது என் அண்ணனுடன் வேலை பார்த்தவர்கள் வயரை எடுத்துக்கொண்டனர் என்றும், அதை என் அண்ணன் கேட்டதில், அவர்களுக்குள் பிரச்சினை என்றும் என் அண்ணன் என்னிடம் சொன்னார். என் அண்ணன் என்னிடம் சொல்லிவிட்டு சென்ற மறுநாள் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>1, 4, 5</u>** <u>மற்றும்</u> **<u>8</u>** <u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வேறு வழக்கில் முன்னிலையாகியுள்ளார் எனவும், குறுக்குவிசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என காலஅவகாசம் கோருகிறார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி மூத்தவழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கான போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**<u>3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்தபோது, என் அண்ணனுடன் வேலை பார்த்தவர்கள் வயரை எடுத்துக்கொண்டதால் பிரச்சினை ஏற்பட்டது என்ற விவரத்தை நான் கூறவில்லை. என் அண்ணன் என் வீட்டிற்கு வந்தார் என்றும், என்னிடம் என் அண்ணனுக்கும், கலையரசனுக்கும் பிரச்சினை என்று கூறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை என் அண்ணன்

பிரேதம் கிடந்த சவக்கிடங்கிற்கு அருகில் வைத்து விசாரித்தனர். நான் சொன்னபடி, சொன்ன விதத்தில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.